வீடுகள் ஒதுக்கப்படுகின்றன. இதற்குக் காரணம் என்ன? இனியாவது இந்த நாட்டு மக்களுக்கு இப்படிப்பட்ட சலுகைகளைக் கொடுப்பதற்கு நம் அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: குடிசை மாற்று வாரியத்தைப் பொறுத்தவரையில் யார் யார் குடிசைகளில் அந்தந்தப் பகுதிகளில் இருந்து வந்தார்களோ அவர்களுக்குத் தான் 'வீடே தவிர 'ஸன்ஸ் ஆப் தி ஸாயில்' தியரியை நாங்கள் ஒத்துக்கொள்ளவில்லை.

Electricity Schemes in North Arcot District

* 524 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that the Rural Electrification Corporation Limited has undertaken to finance the power supply at North Arcot district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) ஆம்.

(இ) இதுவரையில் வட ஆற்காடு மாவட்டத்திற்கு 176.722 இலட்சம் மதிப்புள்ள நான்கு கிராம மின்மய திட்டங்களும் (Rural Electrification Schemes), மேலும் பல்வேறு திட்டங்களும் வழங்கப்பட்டுள்ளன.

வேடந்தாங்கல் பறவைகள் உய்விடம்.

* 525 வினு—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள வண்ணப்பறவைகள் கூடும் வேடந்தாங்கலைச் சுற்றுலாத்துறையின் கீழ் மேம்படுத்த என்னென்ன திட்டங்கள் உள்ளன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: வேடந்தாங்கலைச் சுற்றுலாத் துறையின் கீழ் மேம்படுத்துவதற்குத் திட்டம் எதுவும் இல்லை.

TRUTH ALONE TRIUMPHS

திரு. கா. வேழவேந்தன்: சுற்றுலாத்துறையிலிருந்து மேம் படுத்துவதற்கான திட்டம் இல்லை என்றால் இதை வனத்துறை மூலமாகவாவது மேற்கொண்டு—தமிழகத்தில் மிகச் சிறந்த சிறப்புப் பெற்றிருக்கிற இந்த ஏரிக்கு வண்ணப் பறவைகள் ஏராளமாக வந்து கூடுகின்றன—ஆகவே அந்த ஏரியில் தண்ணீர் வற்றிவிடாமல் பாதுகாக்க பொதுப்பணித் துறையினரை அணுகி ஆவன செய்வதற்கும் அந்த ஏரியில் வந்து கூடுகிற பறவைகளைப் பார்ப்பதற்கு தொலைதூரக் கண்ணாடிகளை அமைப்பதற்கும் உரிய மேம்படுத்தும் திட்டம் ஒன்றை அரசு வகுக்குமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: வந்து கூடுகிற பல்வேறு இனப் பறவைகள் தங்கி இனப்பெருக்கம் செய்கிற அளவில் நல்ல கடம்ப மரங்களை வளர்க்கும் திட்டமும், வேடந்தாங்கலைச் சுற்றி அகழிகள் ஏற்படுத்தவும் அந்த ஏரியினை ஆழப்படுத்தும் திட்டமும் வனத்துறை மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: வெளி நாடுகளிலிருந்தும் வட நாட்டிலிருந்தும் வரக்கூடியவர்கள் எல்லாம் சாதாரணமாக வேடந்தாங்கலுக்கு போகிறார்கள். மழைக் காலங்களில் அங்கு ரோடு சரியாக இல்லாத நிலையில், போக முடியாத நிலை இருக்கிறது. எனவே அந்த ரோடை சரி செய்து போக்குவரத்து வசதியை நல்லமுறையில் செய்ய ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இந்தச் சீரமைப்பு வேலை களில் அதுவும் அடங்கும்.

திரு. வை. பாலசுந்தரம்: வேடந்தாங்கல் இருக்கிற பகுதி என் தொகுதியைச் சார்ந்ததாகும். அந்தப் பகுதியில், வேடந்தாங் கலுக்கு வருகிற பறவைகள் ஆண்டுக்காண்டு குறைந்து வருகின்றன, அதேபோல் பார்வையாளர்களும் ஆண்டுக்காண்டு குறைந்துகொண்டு வருகிறார்கள். காரணம் அந்த ஏரியில் உள்ள மரங்கள் எல்லாம் விழுந்துவிட்டன என்று சொல்லப்படுகிறது. ஆகவே பக்கத்தில் அகழி என்ற ஊரில் ஆயிரக்கணக்கான மரங்கள் உள்ள அந்த ஏரியில் வேடந்தாங்கலில் இருந்து அகழிக்கு அதைக் கொண்டு வந்தால் நலமாக இருக்கும் என்று அந்தப் பகுதி மக்கள் கருதுகிறார்கள். இதை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

1974 மார்ச் 20]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: கணக்குகளைப் பார்க்கிற போது ஆண்டுக்காண்டு பறவைகள் அதிகமாகவும் ஆண்டுக்காண்டு பார்வையாளர்கள் அதிகமாகவும் வந்ததாகத்தான் கணக்கு என்னிடம் இருக்கிறது. வேடந்தாங்கல் என்பது உலகம் அறிந்த ஒரு இடமாக ஆகிவிட்ட காரணத்தால் புதிய இடத்திற்கு மாற்றுவது என்பதற்கில்லை, ஏதாவது சீரமைப்பு வேலையைப் பற்றிச் சொன்னால் அதைப் பற்றி பரிசீலனை செய்யலாம்.

திரு. சி. ஆறுமுகம்: இந்தியாவிலேயே சுற்றுலாப் பயணிகளை அதிகமாக கவர்கிற ஒரு இடமாகும் வேடந்தாங்கல் கிராமம். அங்கிருந்த மரங்கள் எல்லாம் செத்துப் போய் விடுகின்றன. நம் காட்டு இலாகாவினர் அருகில் உள்ள அந்தவாக்கம் என்ற கிராமத்திலிருந்து மரங்களை வேரோடு பிடுங்கி அங்கு நடுகிறார்கள். அவை மீண்டும் செத்துப் போய் விடுகின்றன. ஆகவே இதற்கு நிரந்தரமான ஒரு திட்டத்தை அரசு வகுப்பதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இந்தக் கடம்ப மரத்தைப் பொறுத்தவரையில் வேனிற்காலத்தில் சென்று பார்த்தால் ஒரு இலை கூட இராது. உதிர்ந்துவிடும். ஆனால் பிறகு மீண்டும் துளிர்த்துவிடும். நான் கூட மூன்று மாதங்களுக்கு முன் ஒரு சமயம் சென்று பார்த்தபோது எல்லா மரங்களும் பட்டுப் போனவைபோல் காட்சியளித்தன. நான்கு மாதங்களுக்கு இலை உதிர்ந்து விடுகிறது, பின்னர் துளிர்த்துவிடுகிறது. ஆகவே நிறையக் கடம்ப மரங்களை வளர்த்து வருகிறோம்.

திரு. சி. ஆறுமுகம்: அந்தக் கடம்ப மரங்களும் வெய்யில் காலத்தில் இலைகளை உதிர்த்துவிடுவது உண்மைதான். நான் சொன்னது மரங்கள் செத்துவிடுகின்றன. அருகில் உள்ள கிராமத்தில் இருந்து மரங்களை வேரோடு பிடுங்கி அங்கு நட்டு வைத்தும்கூட அதுவும் பிழைப்பது இல்லை என்றுதான் நான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அந்த மரத்தை தண்ணீர் இருக்கிற காலங்களில் உள்ளே நட்டுவிட்டால் தண்ணீரில் அமுங்கி விட்டால் செத்துவிடும். தண்ணீருக்கு வெளியே இருக்க வேண்டும். அப்படி நடுகிற மரங்கள் பிழைத்துக்கொள்கின்றன. அதிக மரங்களை வளர்க்கவேண்டும் என்பதுதான் உண்மையாகும்.

திரு. வை. பாலசுந்தரம்: அந்த ஏரித் தண்ணீரை வயல்களுக்குப் பாய்ச்சுவதற்கு பயனபடுத்துகிறார்கள். இதனால் கூட அந்த ஏரியில் உள்ள வண்டல் மண் கழனிககுப பாயந்துவிடுவதால் அந்த ஏரி சத்து இழந்து விடுவதற்கு ஒரு காரணமாகக் கூறப்படுகிறது. ஆகவே அந்த ஏரியில் இருநது தண்ணீரை வயல்களுக்குப் பாய்ச்சாத அளவிற்கு ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: ஏற்கனவே உத்தரவாதம் அளிக்கப்பட்ட பாசனப் பகுதிகள் சில இருக்கின்றன. அவற்றிற்கு சட்டப்படி நாம் தண்ணீர் அளித்துத்தான் ஆகவேண்டும்.

காடுகளிலுள்ள சிங்கங்கள்

* 526 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசின் பாதுகாப்பில் எத்தனைச் சிங்கங்கள் எங்கெங்குப் பாதுகாக்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தமிழ்நாட்டிலுள்ள காடுகளிலோ, அல்லது மாநில வனத்துறையின் பொறுப்பிலுள்ள மற்ற இடங்களிலோ, சிங்கங்கள் இல்லை.

Pedestrian crossing in Madras

* 527 *Q.*—THIRU N. DENNIS:
THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Transport be pleased to state the steps taken by the authorities to prevent the indiscriminate crossing of roads by pedestrians in Madras City?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சென்னை மாநகரிலுள்ள போக்குவரத்துக் காவல்படை கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது—

(1) வகை தொகையற்ற முறையிலும், போக்குவரத்து விதிகளைக் கவனிக்காமல் குறுக்கு நெடுக்காகவும் சாலையைக் கடந்து செல்லும் பாதசாரிகள் மீது வழக்குகள் தொடருவது மும்முரமாக்கப்பட்டுள்ளது.